# செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 14** **நாள்: 09.02.2017**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 19 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் 10.02.2017 அன்று வழங்கப்படும்.**
**பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு !**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அங்கன்வாடி மையங்கள், மாநகராட்சி பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் 19 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள்! 10.02.2017 அன்று வழங்க சிறப்பு நடவடிக்கை எடுக்கக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் கணக்கின்படி இந்தியாவில் 1 முதல் 14 வயதுடைய 24.1 கோடி குழந்தைகள் குடற்புழு தொற்று ஏற்படக்கூடிய அபாய நிலையில் உள்ளனர். இது சராசரியாக 1 முதல் 14 வயதுடைய குழந்தைகளில் 68% ஆகும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நாடு தழுவிய குடற்புழு நீக்க நாள் 10.02.2017 அன்று அனுசரிப்பதால், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து சென்னை ஆரம்ப சுகாதார மையங்களிலும், மாநகராட்சி பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் (ICDS-)தின் கீழ் இயங்கும் அங்கன்வாடி மையங்களிலும் குடற்புழு நீக்க மருந்து (அல்பெண்டசோல்) மாத்திரை ஒரே நாளில் வழங்கப்பட உள்ளது. முகாம் நாளான 10.02.2017 அன்று விடுபட்ட குழந்தைகளுக்கு 15.02.2017 அன்று குடற்புழு நீக்க மருந்து வழங்கப்பட உள்ளது.

இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் இரத்தச்சோகையினால் குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றனர். 6–59 மாதம் வயதுடைய குழந்தைகளில் 10–ல் 7 குழந்தைகள் (70%) இரத்தச் சோகையினால் பாதித்துள்ளனர். 15–19 வயதினரிடையே, 56 சதவீத பெண்களும், 30 சதவீத ஆண்களும் இரத்த சோகையினால் பாதித்துள்ளனர். 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 50 சதவிகிதம் உடல் வளர்ச்சி குன்றியும், 43 சதவிகிதம் எடை குறைவாகவும் உள்ளனர்.

குடற்புழு நீக்க நாள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு தலைமை ஆசிரியர் மற்றும் அனைத்து ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து, குடற்புழு நீக்க நாள், அதன் முக்கியத்துவம் ஆகியவற்றைப்பற்றி பள்ளி நிர்வாக குழுவினருடனும், பெற்றோர் ஆசிரியர் கழக அங்கத்தினருடனும் குடற்புழு நீக்க தகவல் பற்றிய பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 இலட்சத்து 95 ஆயிரத்து 611 குழந்தைகள் பயனடைவார்கள். மேலும் 1 முதல் 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு ½ மாத்திரை (200 மி.கி.) மற்றும் 2 முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு 1 அல்பெண்டசோல் (400 மி.கி) மாத்திரை குழந்தைகளுக்கு அளிப்பதன் மூலம் குழந்தைகளின் ஆரோக்கியம் மேம்படுவதுடன் ஊட்டச்சத்து குறைபாடு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், கல்வித்திறன் அதிகரிக்கவும் உதவுகிறது. ஆகவே, அனைத்து பெற்றோர்களும் தங்களது குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரையை அருகிலுள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் பெற்று பயன்பெறவும், வளமான இளைய சமுதாயத்தை உருவாக்கவும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி,**